மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள்தான் கிராம அளவில் மக்களின் நலனைப் பேணுவதில் முதன்மையான பொறுப்பில் இருப்பவர்கள். குழந்தைகளின் உரிமைகளை மீட்டுத் தருவது தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களின் கடமையாகும். கிராம அளவில் குழந்தைகளுக்கான பாதுகாப்புக் குழுவை அமைத்து வழி நடத்துவதில் தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு பெரும் பங்கு இருக்கிறது. அதேபோல் அரசின் சட்டங்களையும் திட்டங்களையும் நன்கு தெரிந்து கொண்டால்தான் அவற்றை பயன்படுத்தி தன் பகுதியில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களால் நன்கு பணியாற்ற முடியும் . இதுகுறித்த அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்டதுதான் இந்தக் கையேடு.


இளந்தென்றல்

குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வருவோம்!

இளந்தென்றல்

# பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

## நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்



unicef
for every child

வாய்மையே வெல்லும்

# பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

# நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்

இளந்தென்றல்

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாடு மற்றும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வரும் திட்டத்துக்கான கருத்துப் பெட்டகம்

unicef for every child

பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
Panchayati Raj Institution

நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்
Standard Operating Procedure - SOP

முதல் பதிப்பு: மார்ச், 2020
First Edition: March, 2020

வெளியீடு :
மாநில கருவூல மையம், சென்னை - 600 020.
State Resource Centre, Chennai - 600 020.
Email: sbtamilnadusrc@gmail.com
044-24914147

வடிவமைப்பு:
THY Designers & Computers
Triplicane, Chennai - 600 005
044-42113807

# அறிமுகம்

குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகள், காவல் துறையினர், குழந்தைகள் நலக் குழுவினர், முன்னணிக் களப் பணியாளர்கள், பஞ்சாயத்து அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், பள்ளி ஆசிரியர்கள், கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு துறையினர் குழந்தைத் திருமணத் தடுப்புப் பணியில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகிறார்கள். குழந்தைத் திருமணத் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இவர்கள், தங்களது கடமைகளையும் பொறுப்புகளையும் எளிமையாகப் புரிந்து கொண்டு செயல்படுவதற்காக உருவாக்கப்பட்டவைதான் இந்த நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள் (Standard Operating Procedure - SOP). குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு நிவாரணம் வழங்கவும், தங்களது கடமைகளைச் சரிவர செய்யவும், உதவும் வகையில் இந்தப் புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது.

குழந்தைத் திருமண முறையை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வந்த சமூகமாக, நமது சமூகம் மாற வேண்டும். குழந்தைத் திருமணத் தடுப்பு என்பது நிகழவிருக்கும் திருமணத்தைத் தடுப்பதற்கான செயல்பாடு மட்டுமல்ல. வளரிளம் பருவத்தினருக்கு உடல்நலம், கல்வி, திறன் மேம்பாடு, சுகாதாரம் போன்ற பல்வேறு அம்சங்களும் சரிவர கிடைத்தால்தான் அவர்களின் முழுமையான வளர்ச்சி சாத்தியப்படும். இவர்களே, எதிர்காலத்தில் நமது சமூகத்தை மேம்பட்ட சமூகமாக மாற்றுவதற்கான முக்கியக் காரணியாகத் திகழ்வார்கள்.

ஆணைப்போல் பெண்ணுக்கும் இலக்குகள் உண்டு. ஒட்டுமொத்த வளர்ச்சியில் இருவருக்கும் உரிமை உண்டு. இதை சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் உணர வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எல்லாவிதமான சேவைகளும் தேவைப்படுகின்றன. சட்டரீதியான நிவாரணம், பாதுகாப்பு, உடல், மனநல சேவைகள், கல்வியைத் தொடர வாய்ப்பு... இப்படி உடனடி நிவாரணத்திற்கும் நீண்டகால வாழ்விற்குமான சேவைகள் தேவைப்படுகின்றன. இந்த நிலையில், வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள் அளிக்கும் துறையினர் அனைவரும் தனித்தனியே செயல்பட்டு வந்தால் உரிய பலன் கிடைக்காது. அனைத்துத் தரப்பினரும் இணைந்து

செயல்பட்டால்தான் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும். இதற்கான கூட்டுப் பயணத்தைத் தொடங்குவோம்.

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காகவும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு கொண்டுவருவதற்காகவும் மாநில கருவூல மையம் இந்தப் புத்தகத்தை உருவாக்கியுள்ளது. இந்த முயற்சிக்குத் துணை நிற்கும் தமிழக அரசின் சமூக நலத் துறை மற்றும் யுனிசெஃப் அமைப்பை நன்றியுடன் நினைவுகூர்கிறோம்.

# பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்




## குழந்தைத் திருமணம்

'திருமணம்' என்பது உரிய வயதுடைய ஆண், பெண் இருவருக்கும் இடையே சமூக ரீதியாகவும் சட்டபூர்வமாகவும் மேற்கொள்ளப்படும் ஓர் ஒப்பந்தம்.

பல இடங்களில் பெற்றோர் மற்றும் பராமரிப்பாளரின் கட்டாயத்தாலோ, ஆண், பெண் இருவரும் மனம் விரும்பியோ இள வயதிலேயே திருமணம் செய்கிறார்கள். 18 வயதிற்கு குறைவான பெண்ணுக்கும் 21 வயதிற்கு குறைவான ஆணுக்கும் நடைபெறும் திருமணத்தை, குழந்தைத் திருமணம் என்கிறோம். இது சட்டப்படி குற்றமாகும்.

குழந்தைத் திருமணம் உலக அளவில் பிரச்சினையாக இருந்தாலும், குறிப்பாக ஆப்பிரிக்காவிலும் தெற்கு ஆசியாவிலும் இது முக்கிய பிரச்சினையாக உள்ளது. சமீப காலங்களில் குழந்தைத் திருமணங்கள் நடப்பது குறைந்து வந்தாலும்கூட, கிராமப்புறங்களில் மட்டுமல்லாமல், மிகவும் வறுமையில் வாடும் மக்களிடையேயும் இது பரவலாக உள்ளது. குழந்தைத் திருமணங்களைத் தடுக்கும் வகையில் சட்டங்கள்

கொண்டு வரப்பட்டாலும் கூட, சில சமூகங்களில் இந்த நடைமுறை இன்றும்கூட தொடர்ந்து வருகிறது.

## இந்தியாவில் குழந்தைத் திருமணம்

உலகிலேயே வளரிளம் பருவத்தினர் மிக அதிகமுள்ள நாடு இந்தியா. இந்தியாவில் திருமணமாகும் பெண்களின் சராசரி வயது மிகக் குறைவாகவே அதிகரித்து உள்ளது. மாவட்ட அளவில் வீடுகளில் எடுக்கப்பட்ட கணக்கீட்டின்படி (2007-2008), 20லிருந்து 24 வயதுக்குட்பட்ட சுமார் 43 சதவீத திருமணமான பெண்கள், 18 வயதுக்கு முன்னதாகவே திருமணம் செய்ததாகத் தெரிகிறது.

இந்தியாவிலேயே பீகாரின் வடகிழக்குப் பகுதியில் குழந்தைத் திருமணங்கள் அதிகம் (68 சதவீதம்) நடைபெறுகின்றன. இமாச்சலப் பிரதேசத்தில் குழந்தைத் திருமணங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு (9 சதவீதம்). கிழக்கு, மேற்கு மாநிலங்களில் ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், பீகார், ஜார்கண்ட், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் அதிகபட்சமான குழந்தைத் திருமணங்கள் நடைபெறுகின்றன. தமிழ்நாட்டில் திருமணமாகியுள்ள 20 -24 வயதுக்குட்பட்ட 16.3 சதவீதப் பெண்கள் 18 வயதுக்கு முன்பாக குழந்தைத் திருமணம் செய்தவர்களாக உள்ளனர்.

## குழந்தைத் திருமணமும் பெண்களும்

பெண் குழந்தைகளுக்கு குழந்தைத் திருமணம் செய்து வைப்பதால் அவர்கள் மிகக்குறைந்த வயதிலேயே கர்ப்பம் அடைகிறார்கள். அவர்களுக்கு ஊட்டச்சத்துக் குறைவு ஏற்படுகிறது. கல்வி பெறுவதற்கான வாய்ப்பு நின்று போகிறது. பொருளாதார ரீதியாக தன்னுரிமை மேம்பாடு அடைந்தவர்களாக இருப்பதும் குறைந்து போகிறது. அத்துடன், 18 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு திருமணம் நடத்தி வைப்பதால், அவர்கள் எந்தவிதமான ஆளுமையும் இல்லாத நிலையில் குடும்ப வன்முறைக்கு ஆளாகிறார்கள்.

பெண் குழந்தைகளைத் தொடர்ந்து படிக்க வைத்தல், அவர்களுக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல்,

பிறப்பு மற்றும் திருமணப் பதிவேடுகளை முறைப்படுத்துதல் போன்ற பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகும்கூட, குழந்தைத் திருமணத்தை முழுவதுமாக முடிவுக்குக் கொண்டு வர முடியவில்லை.

## குழந்தைத் திருமண தடுப்பு நடவடிக்கைகள்

குழந்தைத் திருமணம் என்பதை ஒரு பிரச்சினையாக அங்கீகரித்து, பிரிட்டிஷ் அரசால் 1929இல் சாரதா குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது பெண்களுக்கான திருமண வயது வரம்பு 15 எனவும், ஆண்களுக்கு 18 வயது எனவும் வரையறுக்கப்பட்டிருந்தது. 1978 மற்றும் 2006இல் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்திற்கு பிறகு, பெண்ணின் திருமண வயது 18ஆகவும் ஆணின் திருமண வயது 21ஆகவும் வயது வரம்பு உயர்த்தப்பட்டது.

குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்தை உறுதி செய்ய அவர்களுக்கான சமத்துவமான நியாயமான உலகை பெற்றுத்தர இந்திய அரசு 2013-இல் குழந்தைகளுக்கான தேசியக் கொள்கையை வடிவமைத்துள்ளது. குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை நான்கு முக்கிய கருத்துக்களை வலியுறுத்துகிறது.

1. உயிர் வாழ்தல்.
2. உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து.
3. கல்வி மற்றும் முன்னேற்றம்.
4. பாதுகாப்பு மற்றும் பங்கேற்பு.

குழந்தைத் திருமண முறையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும் என்று 2013ஆம் ஆண்டு செப்டம்பர் 25ஆம் தேதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்சில் முக்கியத் தீர்மானத்தை நிறைவேற்றியது.

நமது நாட்டில் குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டாலும், சட்டத்தை தீவிரமாக செயல்படுத்துவது என்பது இன்றும் கூட சவாலாகவே உள்ளது.

# நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள்

## (Standard Operating Procedure - SOP)

கிராம அளவில், முதன்மையான அதிகாரம் படைத்தவர்கள் பஞ்சாயத்துத் தலைவரும் உறுப்பினர்களும்தான். அந்தக் கிராமத்திற்கு தலைமைப் பொறுப்பேற்று கிராமத்தை வழி நடத்துபவராக, கிராமத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபடுபவராக மக்களின் துயர்களை நீக்குபவராக செயல்படுபவர் பஞ்சாயத்துத் தலைவரும் பஞ்சாயத்து உறுப்பினர்களும்தான். ஒரு கிராமத்தில் கலாச்சார மதிப்பீடுகள் காரணமாக குழந்தைத் திருமணம், வரதட்சணைப் பிரச்சினை நடந்து கொண்டிருந்தாலும், அதைத் தன் கவனத்தில் எடுத்து துரிதமாகச் செயல்படும் அதிகாரமும், பொறுப்பும் உடையவர் கிராமத்து பஞ்சாயத்துத் தலைவரும் உறுப்பினர்களும்தான்.

அத்தகைய ஆற்றல் மிகுந்த கிராமப் பஞ்சாயத்து தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு குழந்தைத் திருமணம் பற்றி நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதில் பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான பங்கு மிகவும் முக்கியமானது. இந்த அலுவலர்கள் கிராம அளவிலும் மாவட்ட அளவிலும் மதிப்பும் அதிகாரமும் கொண்ட முக்கிய பொறுப்பு வகிக்கிறார்கள். எனவே இவர்களால் ஒரு சமூகத்தின் எல்லா பகுதிகளுக்கும் சென்று, சூழ்நிலைகளுக்கு ஏற்ப குழந்தைத் திருமணம் பற்றிய சட்ட திட்டங்களை எடுத்துச் சொல்ல இயலும். பஞ்சாயத்து உறுப்பினர்கள், தங்களது தொகுதியில் தங்களுடைய சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி புதிய எடுத்துக்காட்டுகளையும் முன் முன்மாதிரிகளையும் நிலைநாட்ட வேண்டும்.

குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டப் பிரிவு 16(2)இன் படி குழந்தைத் திருமணத்தைத் தடுக்க குழந்தைத் திருமணத்

தடுப்பு அதிகாரிக்கு உதவ வேண்டியது ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் கடமையாகும். குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி அல்லது காவல் அதிகாரிக்கு தகவல் அளித்து ஒத்துழைப்பு அளித்து. சட்டத்தை நடைமுறைப்படுத்த உதவிசெய்ய வேண்டும்.

**திருமணத்தை நிறுத்த சம்பந்தப்பட்டவர்கள் மறுத்தால் அல்லது திருமணம் ஏற்கனவே நடந்திருந்தால் :**

- மிக அருகில் உள்ள காவல் நிலையத்தில் அல்லது நீதித்துறை நீதிபதியிடம் தகவல் அளிக்க வேண்டும். காவல் துறையினர் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு (FIR) செய்ய வேண்டும்.
- காவல் நிலையத்தில் தகவலை ஏற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய மறுத்தால் அல்லது அருகில் காவல் நிலையங்கள் இல்லை என்றால் நீதித்துறை நீதிபதியிடம் தகவல் அளிக்க வேண்டும்.
- காவல் நிலையத்திற்கோ நீதிமன்றத்திற்கோ செல்ல இயலவில்லை என்றால், கீழ்க்காணும் அமைப்புகளில் ஒன்றை தொடர்பு கொள்ள வேண்டும்.
    - 1098 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் கொண்ட சைல்டு லைன் (Child Line)
    - ஊராட்சி ஒன்றிய அளவில், கிராம சேவிகா (மகளிர் ஊர் நல அலுவலர் )மற்றும் முக்கிய சேவிகா (சமூக நல விரிவாக்க அலுவலர்) மாவட்ட அளவில் மாவட்ட சமூக நல அலுவலர் / குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி.
    - குழந்தை நலக் குழுவைச் சேர்ந்தவர்கள்
    - மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் (District Superintendent of Police )
    - மாவட்ட ஆட்சியர்
- பாதிக்கப்பட்ட குழந்தையை உடனடியாக அல்லது 24

மணிநேரத்திற்குள் 2000 ஆம் ஆண்டு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின் கீழ் குழந்தை நலக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். அதுவரை குழந்தையை 2015 ஆம் ஆண்டு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின் கீழ் (Juvenile Justice Act) பதிவு செய்யப்பட்ட மாநில அரசு அங்கீகாரம் பெற்ற காப்பகத்தில் அந்தக் குழந்தையைப் பாதுகாப்பாக இருக்கச் செய்ய வேண்டும்.

- குழந்தைகளிடம் பேசி அவர்களுக்கு குழந்தைத் திருமணத்தைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் புரியவைத்து, அது குறித்த சட்டங்களைச் சொல்ல வேண்டும். அத்திருமணத்தை மறுக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு என்பதை எடுத்துரைக்க வேண்டும்.
- குழந்தைத் திருமணத்தை நடத்த உதவும் நபர்களைப் பற்றிய ஆதாரங்களைச் சேகரித்து (CMPO) குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரியிடம் பகிரவேண்டும்.
- பாதிக்கப்பட்ட குழந்தைக்குத் தேவையான பாதுகாப்பும் ஆதரவும் அளிக்க (CMPO) குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரியுடன் இணைந்து செயல்பட வேண்டும். தேவைப்பட்ட உதவிகள் அளிக்க பள்ளிக் கல்வித் துறை, சுகாதாரத் துறை, குழந்தை நலக் குழு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியை நாட வேண்டும்.
- முழுமையாக அக்குழந்தையின் தேவைகளையும் வீட்டு சூழ்நிலையையும் மதிப்பிட குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலருக்கு உதவ வேண்டும் (Home Study and Needs Assessment).
- இந்நிகழ்வுக்குப்பின் பெற்றோரால் ஏற்கப்படவில்லை என்றால் குழந்தையின் நீண்ட கால மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பு குறித்து திட்டமிட குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலருக்கு (CMPO) உதவி செய்ய வேண்டும்.

- குழந்தைத் திருமணத்தின் காரணமாக பெண் குழந்தையின் பள்ளிப் படிப்பு தடை பட்டிருந்தால், அந்தக் குழந்தை மீண்டும் பள்ளியில் சேர்ந்து பயில உதவி செய்ய வேண்டும்.

- குழந்தைத் திருமணம் நிகழ்வுகளின் போது தொடர்புகொள்ள வேண்டிய அமைப்புகள் மற்றும் நபர்களின் தொடர்பு விவரங்களைச் (பெயர், தொலை பேசி எண், முகவரி, மின்னஞ்சல்) சேகரித்து அலுவலகத்தில் அனைவருக்கும் தெரியும்படி காட்சிப்படுத்தி வைக்கவேண்டும்.

- ஊராட்சி ஒன்றிய உறுப்பினரே இந்தக் குற்றங்களைச் செய்தால் அவருடைய உறுப்பினர் பதவி ரத்து செய்யப்பட வேண்டும் என்ற விதிமுறை உள்ளது. இதுகுறித்து நடவடிக்கை எடுக்க ஊராட்சியின் மற்ற உறுப்பினர்கள் பஞ்சாயத்துத் தலைவருக்கு அழுத்தம் தரலாம்.

## தொடர் செயல்பாடுகள்:

- தங்கள் குடும்பத்தில் குழந்தைத் திருமணங்கள் நடக்கவில்லை என்பதையும் வரதட்சணை கொடுக்கல் வாங்கல் இல்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

- ஊரில் குழந்தைத் திருமணம் நடந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்க உதவ வேண்டுமே தவிர எக்காரணம் கொண்டும் திருமணத்திற்கு செல்லக் கூடாது.

- பஞ்சாயத்துக் கூட்டங்களிலும், கிராமக் கூட்டங்களிலும் குழந்தைத் திருமணத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் வரதட்சணை பிரச்சினைகள் குறித்தும் பேச வேண்டும். இவற்றில் ஈடுபடுவது சட்ட மீறல் என்பதையும் விளக்கிக் கூற வேண்டும்.

- குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் (2006), வரதட்சணைத் தடைச் சட்டம் (1961) ஆகியவற்றின்படி அதற்கு எதிராக குழந்தைத் திருமணம் செய்து வைப்பவர்கள் மீதும்

வரதட்சணை வாங்குபவர்கள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊரில் அறிவிப்பு செய்ய வேண்டும்.

- தனிப்பட்ட முறையில் மக்களை அணுகும்போது குழந்தைத் திருமணத்தின் மோசமான விளைவுகளைப் பற்றி எடுத்துக்கூறி அத்தகைய சட்ட விரோதமான திருமணங்களைச் செய்ய வேண்டாம் என அறிவுறுத்த வேண்டும்.

- கிராம சபைக் கூட்டம், பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்ற திருவிழா நாட்களில் குழந்தைத் திருமணம், வரதட்சணைப் பழக்கம் ஆகிய இரண்டுமே சட்ட விரோதமானவை என்பதை மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும். கிராமங்களில் இந்தக் கொடுமைகள் நடக்காமல் இருக்க தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும்.

- வரதட்சணை வாங்காதவர்களையும் குழந்தைத் திருமணத்தை நிறுத்தக் காரணமானவர்களையும் கிராமக் கூட்டங்கள், பண்டிகைகள் மற்றும் திருவிழாக்கள் நடக்கும் போது பாராட்ட வேண்டும்.

- குழந்தைத் திருமணத்தை தடுப்பதற்காக மாவட்டத்தில் எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

- சாதி மற்றும் மதத் தலைவர்களிடமும் முக்கிய தலைவர்களிடமும் கலந்துபேசி அவர்களது தொடர்புக் குழுக்களில் குழந்தைத் திருமணம் செய்ய மாட்டோம், வரதட்சிணை வாங்க மாட்டோம் என்ற தீர்மானங்களை நிறைவேற்றச் சொல்ல வேண்டும்.

- குழந்தைத் திருமணங்களுக்கு எதிராகச் செயல்பட, கிராம மற்றும் நகர்ப்புற குழுக்களை வலுப்படுத்த வேண்டும். ஊரில் நடக்கும் அனைத்துத் திருமணங்களையும்

கண்காணிக்க வேண்டும். மணமகள், மணமகன் வயது பற்றிய சந்தேகங்கள் இருந்தால் தகுந்த அதிகாரிகளிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

- ஊரில் நடக்கும் அனைத்துத் திருமணங்களையும் பதிவு செய்யச் சொல்லி வலியுறுத்த வேண்டும். இத்திருமணங்களை பதிவு செய்ய, பயன்படுத்தப்பட்ட பிறப்பு சான்றிதழ்கள் நம்பகமானவையா என்பதையும் சரிபார்க்க வேண்டும். அச்சான்றிதழ்களைப் பற்றி சந்தேகங்கள் இருந்தால் தகுந்த அதிகாரிகளிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.
- வளரிளம் பருவத்தினருக்கான குழுக்களைத் தொடங்கச் செய்து குழந்தைத் திருமணத்தின் மோசமான விளைவுகளைப் பற்றிய விழிப்புணர்வை இளம் சமூகத்தினரிடையே உருவாக்க அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.
- குழந்தை நலக் குழு, பள்ளி மேலாண்மைக் குழு, சமுதாய நீதிக் குழு முதலிய உள்ளூர் சமூக நலக் குழுக்களில் பொறுப்புகள் ஏற்று ஆக்கப்பூர்வமாகச் செயல்பட வேண்டும்.
- நெருக்கடி மற்றும் அவசர சூழல்களில் தொடர்பு கொள்ளவும், ஒத்துழைத்து செயல்படுவதற்கு வளரிளம் பருவத்தினர், வயதில் மூத்தவர்கள், ஊர்த் தலைவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் போன்ற பல தரப்பினர் கொண்ட குழுவை அமைக்க வேண்டும்.

குழந்தைத் திருமணம் மற்றும் வரதட்சணை பிரச்சினை பற்றி கிராமக் கல்விக் குழுவிற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அதன் உறுப்பினர்களை அவர்கள் பகுதியில் குழந்தைத் திருமணங்கள் நடக்கிறதா என்பதைக் கண்காணிக்கும் செயல் திறன் உள்ளவர்களாக ஆக்கவேண்டும். கல்விக்குழு மூலம் அனைத்துக் குழந்தைகளின் பெயர்களை பள்ளிகளில்

பதிவு செய்யவும் அவர்கள் பள்ளிப்படிப்பைத் தொடர்ந்து படித்து முடிக்கவும் உதவி செய்யவேண்டும். பெண் குழந்தைகள் கல்வியில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

பள்ளிகளில் படிப்பை இடையில் நிறுத்தும் மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்த்து அவர்களின் படிப்பு தொடர ஏற்பாடு செய்வதன் மூலம் குழந்தைத் திருமணத்தைத் தடுக்கமுடியும்.

சம்பந்தப்பட்ட துறைகளுடன் மக்களை இணைக்க உதவுங்கள். அதனால் அரசாங்க செயல்முறைகளையும் திட்டங்களையும் அவர்கள் அறிந்து பயன் பெற முடியும். இத்தகைய திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்றடையச் செய்வதன் மூலம் திருமணத்தை சட்டப்படியான வயது வரை தள்ளிவைக்கவும் வரதட்சணைப் பழக்கத்தை முடிவுக்கு கொண்டுவரவும் முடியும்.

குறிப்புகள்

குறிப்புகள்